# இன்று நள்ளிரவு வரை மெட்ரோ ஓடும்

புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி, இன்று நள்ளிரவு, 1:00 மணி வரை, மெட்ரோ ரயில் இயக்கப்படும்.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயில் அதிகாலை, 4:30 மணியில் இருந்து இரவு, 11:00 மணி வரை இயக்கப்படுகிறது. ஆங்கில புத்தாண்டையொட்டி, மெட்ரோ ரயில் போக்குவரத்து, இன்று இரவு, 1.00 மணி வரை இயக்கப்படும். இரவு, 11:00 மணிக்கு பின், 28 நிமிட இடைவெளியில் ரயில் இயக்கப்படும் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.